ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1868/11 - 2014 ජූනි මස 24 වැනි අඟහරුවාදා - 2014.06.24

*1868/11 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ், சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

*அனுமதிபெறாது மூன்று மாத காலமொன்றுக்கு சபையின் கூட்டங்களுக்கு சமுகமளியாமை காரணமாக சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும்;*

*ஸ்ரீஸ்கந்தராசா ஸ்ரீறஞ்சன் எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான இலங்கை தமிழரசுக் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ(2) என்னும் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளா ராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின்கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. குகதாசன் தனுசன் என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;*

*இப்போது சாவகச்சேரி பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் பொன்னுத்துரை குகநாதன் ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. குகதாசன் தனுசன் என்பவர் சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட் டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*பொ. குகநாதன்,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*சாவகச்சேரி பிரதேச சபை.*

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்,*
*2014, யூன் 18.*

*07 - 221*